செய்தி வெளியீடு எண்:627 நாள்:18.08.2021

செய்தி வெளியீடு

**கணினித்தமிழ் வளர்ச்சியில் சிக்கல்களும் தீர்வுகளும் எனும் தலைப்பில் கணினித்தொழில்நுட்ப வல்லுநர்குழுக் கூட்டம்! அகரமுதலி இயக்ககத்தில் 19.08.2021ஆம் நாள் நடைபெறுகிறது!**

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் சார்பில் 19.08.2021 வியாழக்கிழமையன்று "கணினித்தமிழ் வளர்ச்சியில் சிக்கல்களும் தீர்வுகளும்" என்னும் பொருண்மையில் துறைசார் வல்லுநர்குழுக் கூட்டம் காலை 10.00 மணிமுதல் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் கணினித்தொழில்நுட்பத்துறை வல்லுநர்கள் 15 பேர் பங்கேற்கவுள்ளனர்.

இன்றைய கணினி உலகில் நாள்தோறும் பல புதிய புதிய துறைகள் தோன்றி அத்துறை சார்ந்த சொற்களும் உருவாகிவருகின்றன. அப்படி உருவாகும் சொற்களுக்கு உடனுக்குடன் தமிழில் கலைச்சொற்களை வடிவமைத்து, அவற்றை மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவரவேண்டும். அவ்வாறு செய்வதனால் மொழிக்கலப்புத் தவிர்க்கப்படுவதோடு, தமிழின் சொல்வளமும் பெருகும்.

அந்தந்தத் துறைசார்ந்தவர்களுக்கே அத்துறைகளில் அடிக்கடி பயன்படுத்தப்படும் சொற்களும், தமிழாக்கம் செய்யப்படவேண்டிய சொற்களும் நன்கு தெரியும் என்பதால், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் துறைசார்ந்த வல்லுநர் குழுக்கூட்டங்களை நடத்திவருகிறது. மேலும், தமிழ்க் கலைச்சொல்லாக்கத்திற்கான தொடர் பணியில் வல்லுநர்களின் துறைசார் புலமையை இவ்வியக்ககம் தொடர்ந்து பயன்படுத்திக் கொள்ளவும் இத்தகைய வல்லுநர்குழுக் கூட்டங்கள் வாய்பாக அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.

அந்தவகையில், 19.08.2021 வியாழக்கிழமையன்று காலை 10.00 மணியளவில் கணினித்தொழில்நுட்பத்துறை வல்லுநர் குழுக்கூட்டம் நடைபெறவுள்ளது. கணினித்தொழில்நுட்பத்தில் திறம்வாய்ந்த 15வல்லுநர்கள் இக்கூட்டத்தில் பங்கேற்கிறார்கள். "கணினித்தமிழ் வளர்ச்சியில் சிக்கல்களும் தீர்வுகளும்" என்னும் பொருண்மையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில், அகராதி உருவாக்கத்தில் தமிழ்மென்பொருள்கள்/செயலிகளின் பயன்பாடு, தரவக உருவாக்கம், தமிழ்க் கணினித் தட்டச்சு (ம) ஒருங்குறி பயன்பாட்டை எளிமையாகக் கையாளுவதற்கான வழிமுறைகள், கணினித்தமிழ்ப் பயன்பாடு, இயந்திர மொழிபெயர்ப்பு, பிழைதிருத்திகள் உள்ளிட்ட கிளைப்பொருண்மைகள் குறித்தும் கருத்துரைகள் வழங்கப்படவுள்ளன.

பட்டினப்பாக்கம் , எம்.ஆர்.சி.நகரிலுள்ள நகர் நிருவாக அலுவலக வளாகத்தின் ஆறாவது தளத்தில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர், அலுவலால் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு துணைச்செயலாளர் மற்றும் தமிழ் இணையக்கல்விக் கழகத்தின் இயக்குநர் (மு.கூ.பொ.) முனைவர் வீ.ப.ஜெயசீலன் இ.ஆ.ப., அவர்கள் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்க உள்ளார். அகரமுதலி இயக்கக இயக்குநர் திரு.தங்க.காமராசு நோக்கவுரையாற்றுகிறார். நிகழ்வை இயக்ககத் தொகுப்பாளர் முனைவர் வே.கார்த்திக் நெறிப்படுத்தி வழங்க, நிறைவாக, திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமதி ஜெ.சாந்தி நன்றி கூறவுள்ளார்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9